**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 1226/2004**

**Date : 27.04.2026**

**வா.சா. 1 – ரால்ப் கிராண்ட் மதன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.

திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெறும் திருமண பூஜை, நினைவு பூஜை, இறந்தவர்களின் இறுதி சடங்கிற்கான பூஜை, திருவிழா வரிகள் மற்றும் சமுதாய கூடங்களில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் போன்ற சகல வரவுகளையும் வங்கியில் வைப்பீடு செய்வதற்கு ஊர் நிர்வாக அலுவலகம் செயல்படுகிறது என்றால் சரிதான். மேற்படி அலுவலகம் ஆலய வளாகத்தினுள் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அலுவலகத்தில் எத்தனை நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் நபர்கள் ஊர் நிர்வாகிகளின் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் தான் பணியாற்றி வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் நபர்களுக்கு ஊர் நிர்வாகிகள் நியமனம் செய்து சம்பளம் கொடுத்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

ஆலய உறுப்பினர்கள் வருடத்திற்கு ஒரு முறை திருவிழா வரி செலுத்த வேண்டுமென்றால் இருக்கலாம். அது குறித்து எனக்கு தெரியவில்லை. திருவிழா சம்மந்தமமான ஒவ்வொரு உறுப்பினரின் தொகையையும் ஊர் பொதுக் குழு கூட்டம் கூட்டி நிர்ணயிப்பார்கள் என்றால் சரிதான். பூசைக்கான கட்டணங்கள் ஆயர் தீர்மானத்தின் படி வசூலித்து எங்களிடம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். ஊர் நிர்வாகத்தில் வரவு செலவுகளை பொறுத்து ஒரு மினிட் புத்தகம் பராமரித்து வருகிறார்கள் என்றால் அது

குறித்து எனக்கு தெரியாது. ஆலய வளாகத்தில் மதக் கோட்பாடுகளுக்கான வகுப்புகள் நடைபெறும் என்றால் சரிதான். ஆலய வளாகத்தில் உள்ள சமுதாய கூடத்தில் தான் பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என்றால் சரிதான். நான் அதில் பங்கு பெறுவதில்லை. மேற்படி சமுதாய கூடத்தில் திருமணம், பிறந்த நாள் விழா, ஞானஸ்னானம், உறுதி பூசுதல் , இறந்தவர்களுக்கான மோட்ச விழாக்கள் போன்றவை நடைபெறும் என்றால் சரிதான். உறுதி பூசுதல் நடக்காது.

மேற்படி நிகழ்ச்சிகள் அனைத்திற்குமான கட்டணங்கள்., பாத்திரங்கள், மின்சார செலவு போன்றவைகளை ஊர் நிர்வாக அலுவலகத்தில் கட்டி ரசீதுகள் பெற வேண்டும் என்றால் சரிதான். மேற்படி சமுதாய கூடத்திற்கென தனியாக இருக்கும் மேனஜர், சுத்திகரிப்பு செய்பவர், பாத்திரங்களை பராமரிப்பவர் ஆகியோர்க்கு ஊதியங்கள் ஊர் நிர்வாகம் தான் நிர்ணயிக்கும் என்றால் சரிதான். மேற்படி நிகழ்ச்சிகளிலிருந்து வரும் வருமானங்களை ஆலயத்தின் ஊர் நிர்வாகிகளின் பெயரில் வங்கி வைப்பீடு செய்வார்கள் என்றா்ல் சரிதான். சமுதாய கூடத்தில் பணியாற்றும் நபர்களை ஊர் நிர்வாகிகள் தான் நியமிப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி சமுதாய கூடத்தில் பணியாற்றும் நபர்களின் ஊதியத்தை ஊர் நிர்வாகிகள் தான் கொடுத்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆலய வளாகத்தில் டேவிஸ் இலவச மருத்துவமனை ஒன்று அமைந்துள்ளது என்றால் சரிதான்.

மேற்படி மருத்துவமனை ஊர் நிர்வாகத்தின் அடிப்படையில் தான் நடந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் மருத்துவர்கள் மற்றம் செவிலியர்களின் சம்பளங்களை ஊர் நிர்வாகம் தான் கொடுத்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி மருத்துவமனைக்கான மருந்துகள் மற்றும் இரத்த பரிசோதனைக்கான செலவுகள் அனைத்தும் ஊர் நிர்வாகம் தான் கொடுத்து வருகிறது என்றால் சரிதான்.

மேற்படி மருத்துவமனையில் எத்தனை நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேலும் அதற்கான வரவு செலவுகள் நிர்வாக அலுவலக ஊழியர்கள் அவர்களால் தலைவர் செயலாளர் பொருளாளர் என திருக்குடும்ப ஆலய வங்கி கணக்கில் வைப்பீடு செய்வார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சமுதாய கூடம் ஊர் நிர்வாகிககளால் கடன் பெற்று கட்டப்பட்டு தவணை முறையில் பணம் ஊர் நிர்வாகிகளால் செலுத்தப்பட்டது என்றால் சரிதான்.

திருக்குடும்ப ஆலயத்தில் திருக்குடும்ப மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி ஊர் நிர்வாகிகளார் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி பள்ளியில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் சம்பளங்களை ஊர் நிர்வாகம் தான் கொடுத்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி பள்ளிகளின் வரவு செலவுகள் அனைத்தும் ஆலய பள்ளியின் பெயரில் வங்கியில் கட்டப்பட்டு வருகிறது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. திருக்குடும்ப ஆலயத்தில் எத்தனை நபர்கள் உறுப்பினர்கள் என்றால் உத்தேசமாக 2000. மேற்படி ஆலய உறுப்பினர்கள் மற்றம் அவர்களது விலாசங்கள் குறித்த பதிவேடுகள் நாங்கள் பராமரித்து வரவில்லை என்றால் சரிதான்.

திருக்குடும்ப ஆலயங்களில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு எத்தனை கல்லரை தோட்டம் உள்ளது என்றால் முக்கியமான கல்லறை தோட்டங்கள் 4 உண்டு. மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கான கல்லரை தோட்டங்களும் உண்டு. எண்ணிக்கை தெரியவில்லை. மேற்படி இறந்தவர்களை எந்த கல்லரை தோட்டத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்று ஊர் நிர்வாகம் தான் முடிவு செய்யும் என்றால் சரிதான். ஆலய

உறுப்பினர்கள் பதிவேடுகள், கல்லரை தோட்டத்திற்கான பதிவேடுகள், சமுதாய கூட்டத்தின் பதிவேடு, ஆலய சொத்துக்களின் பத்திரங்கள் எதுவும் எங்களிடம் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் ஆயர் அலுவலகத்தில் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஊர் நிர்வாகத்தால் நடத்தி வரும் மீன் கடை ஆயர் தொடங்கி வைத்ததா என்றால் மீன் கடை உள்ளது. ஆயர் தொடங்கி வைத்தாரா என்று தெரியவில்லை. மேற்படி மீன் சந்தை இருக்கும் சொத்து யாருக்கு சொந்தமானது மற்றும் அதன் ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மீன் சந்தை ஆலய நிர்வாகத்தால் நடத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி மீன் சந்தைக்கான லைசன்ஸ் மற்றும் பராமரிப்புகள் குறித்து அனைத்தும் ஊர் நிர்வாகிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றால் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி மீன் சந்தைக்கான லைசன்ஸ்யை ரத்து செய்து தனிநபர் ஒருவர் எதிரே மீன் சந்தை வைத்த விவரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தனி நபர் நடத்தக்கூடிய மீன் சந்தைக்கு எதிராக மேற்படி தனி நபரும் ஊர் நிர்வாகிகளும் தாக்கல் செய்த 3 தனித்தனி வழக்குகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆலயம் , சமுதாய கூடம் மற்றும் மீன் சந்தை ஆகியவை இருக்கும் இடங்கள் ஆயரின் சொத்து என்று நான் பிராமாண வாக்குமூலத்தில் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

வாசாஆ 5 ட்ரஸ்ட்க்கான சட்ட விதிமுறைகளை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி சட்ட விதிமுறைகளை மேற்படி கூறிய நிர்வாகங்கள் எந்த முறையில் நடத்தப்படவேண்டும் மேலும் நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது குறித்து மற்றம் நிர்வாகிகளின் பதவி காலம் குறித்த விவரங்கள் வாசாஆ 5ல் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். வாசாஆ 5 ல் ஆலயத்தின் சொத்துக்கள் தொடர்பான விவரங்கள் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 5 ல் ஆலயத்தில் பின்பற்றப்படும் வழிபாட்டு முறைகள் குறித்தும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வாசாஆ 5 ல் வழிபாட்டு சடங்குகள், திருமுழுக்கு, திருமணங்கள் , ஆன்மிக ரீதியான பணிகள், மத ரீதியான கடமைகள், மற்றும் அருள் சாதனங்கள் குறித்தும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 5 ல் திருக் குடும்ப ஆலயத்தை ஊர் நிர்வாகம் செய்வது, வருடந்தோறும் தேர்தல் நடத்துவது , நிர்வாகம் தொடர்பாக பொதுக்குழு கூடும் தேதிகளை பங்கு பணியாளர்கள் ஆலயத்தில் அறிவிப்பது, நிர்வாககிகள் தரும் வரவு செலவு கணக்குகளை ஆலயத்தில் அறிவிப்பது மட்டும் பற்றி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 5 ல் முன்னுரையில் கோட்டார் மறைமாவட்டத்தை சேர்ந்த கார்மெல் நகல் கத்தோலிக்க மக்களால் ராமன்புதூர் திருக்குடும்ப ஆலயம் ஸ்தாபிக்கபபட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கட்டப்பட்டது. வாசாஆ 5 ல் அந்த சமயத்தில் ஆலயத்தின் பங்கு குருவாக இருந்த சூசை வின்சன் அவர்களால் ஆலயத்தில் அறிவிப்பு செய்து கூட்டப்பட்ட கார்மெல் நகல் திருக்குடும்ப ஆலயத்தில் கூட்டப்பட்ட executive கமிட்டியில் 12.02.2025 அன்று அதனை ஒப்புக்கொண்டு சட்ட விதிமுறைகளை பதிவு செய்ய வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

வாசாஆ 5 ஆவணம் நகல் என்றால் சரிதான். வாசாஆ 5ன் அசல் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். வாசாஆ 5 அசல் இல்லை என்பதால் இந்திய சாட்சிய சட்டத்தின்படி அது செல்லாது என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு ஆலயம் ஏற்படுத்தப்படவேண்டும் என்றால் அந்த ஊரில் உள்ள கிறிஸ்துவ மக்கள் போதுமான

விஸ்திரணம் கொண்ட இடத்தை வாங்கியிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆலயத்தோடு சேர்த்து பங்கு இல்லம் கட்டியிருக்க வேண்டும் என்றால் சரிதான். கார்மெல் திருக்குடும்ப ஆலயத்தில் வழிபாடு நடத்துவதற்கான பங்கு பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் பராமரிப்பு தொகை பணியாளர்களுக்கான சம்பளம், மறைமாவட்டத்துக்கு ஆண்டுதோறும் கொடுக்கக்கூடிய மொத்த வருமானத்திலிருந்து 7 சதவீதம் அனைத்து வழிமுறைகளும் இருந்தால் தான் ஆயர் அதனை பங்கு ஆலயமாக அறிவிப்பார் என்றால் சரியல்ல. மேற்படி அனைத்து வழிமுறைகளும் இருந்தால் தான் ஆயர் கார்மெல் நகல் திருக்குடும்ப ஆலயத்தை 23.06.1970 அன்று பங்கு ஆலயமாக அறிவித்தார் என்றால் சரியல்ல.

1963 முதல் 1968 வரை கார்மெல் நகர் திருக்கடும்ப ஆலயத்தில் கார்மெல் சபை துறவிகள் பணிகளை செய்து வந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1945 முதல் தற்போது வரையிலும் திருக்குடும்ப ஆலயம் பொது நிலையரின் நிர்வாக கட்டுப்பாட்டிலும் அவர்களது பராமரிப்பிலும் அவர்களது நிர்வாகத்திலு்ம் உள்ளது என்றால் தற்போது உள்ளது. முன்பு இல்லை. தற்போது என்று குறிப்பிடுவது எந்த தேதியில் என்றால் வாசாஆ 5 லிருந்து. 1945 லிருந்து ஊர் நிர்வாக கட்டுப்பாட்டில் இருப்பது எனக்கு தெரியும். நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ரோமன் கத்தோலிக்க பிரிவில் RC ஆலயங்கள் மட்டுமின்றி ஈஸ்டன் கத்தோலிக்க ஆலயங்கள், போப்பின் தலைமையிலேற்ற மளங்கரா சீரோ மளபார் மற்றும் பல பிரிவுகள் கொண்ட மொத்தம் 24 பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு அங்கிகரிக்கப்பட்ட வழிபாட்டு முறைகளை பின்பற்றி வருகின்றனர் என்றால் சரிதான். கோட்டார் மறைமாவட்டத்திலுள்ள சில சொத்துக்களும்

ஆலயங்களும் கட்டிடங்களும் மறைமாவட்டத்தின் பணத்தால் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அனைத்து ஆலயங்களும். மேற்படி மறைமாவட்டத்தின் பணத்தால் வாங்கப்பட்ட ஆலயங்கள் மற்றும் சொத்துக்களை பாதிரியார்கள் மற்றும் ஆயர்கள் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆயரால் அர்ச்சிக்கப்பட்ட அனைத்து ஆலயங்களும் ஆயராலும் அருள் பணியாளராலும் பங்கு இறைமக்களாலும் இணைந்து வழிநடத்தப்பட்டு வருகிறது.

மேற்படி மறைமாவட்டத்தின் பணத்தால் வாங்கப்பட்ட ஆலயங்கள் மற்றும் சொத்துக்களை மட்டும் தான் பாதிரியார்கள் மற்றும் ஆயர்கள் நிர்வாகம் செய்து வருகிறார்கள் மீதமுள்ள ஆலயங்களை ஊர் நிர்வாகிகள் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆயர் மற்றும் மறைமாவட்டத்தால் வாங்கப்பட்ட சொத்திலிருக்கும் ஆலயங்களுக்கு மட்டும் தான் வாசாஆ 1 சட்ட விதிமுறைகள் பொருந்தும் என்றால் சரியல்ல. வாசாஆ 1 கார்மெல் நகல் திருக்குடும்ப ஆலயத்திற்கான விதிமுறைகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 க்கு முன்பாக 1973 லிருந்தே பல முறை பங்கு பேரவை விதிமுறைகள் ஆயரால் வெளியிடப்பட்டது என்றால் சரிதான்.

அவைகளையெல்லாம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். முந்தைய பங்கு பேரவை விதிகளில் தானாகவே விரும்பும் ஆலயங்கள் மட்டும் ஆயர் வெளியிட்டுள்ள பங்கு அருள் பணி பேரவை மற்றும் நிதிக் குழுவை ஆலய உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டால் நிறுவலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 2 தவக்காள சுற்றுமடல் ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 4 கெனான் சட்டத்தில் உள்ள சில பிரிவுகள் பகுதிகளாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்திய சாட்சிய சட்டத்தின்படி

ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

வாசாஆ 6,7,8,9,10 மற்றும் 11 ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 12 க்கான பதில் நிர்வாகத்தினர் வாசாஆ 13 ன் படி அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். வாசாஆ 14 மற்றும் 15 இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு அனுப்பட்ட ஆவணங்கள் இல்லை . ஆகையால் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 16 திருவிழா நடத்துவதற்காக பணம் கட்ட கோரிபங்கு தந்தைக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். வாசாஆ 17 ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

வாசாஆ 18 ஆவணம் 7 சதவீதம் வரி கேட்டு பங்கு தந்தைக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். வாசாஆ 19 ஆவணம் 7 சதவீதம் வரி கேட்டு பங்கு தந்தைக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். வாசாஆ 19 ஆவணத்தில் இணைப்பாக இருக்கும் கடைசி பக்கங்கள் ஊர் நிர்வாகம் தந்த வரவு செலவு கணக்குகள் என்றால் சரிதான். வாசாஆ 20 ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஏற்புடையதல்ல மேலும் பிரதிவாதிகளுக்கு தொடர்பு இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வாசாஆ 21 ஊர் மக்கள் ஆயருக்கு அனுப்பிய வேண்டுகோள் பிரதிவாதிகளுக்கு தொடர்பு இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வாசாஆ 22 அனைத்தும் நகல் மேலும் அஞ்சலக ஒப்புதல் மற்றும் ரசீது இல்லை ஆகையால் இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

வாசாஆ 27 ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை . மேலும் பிரதிவாதிகளுக்கு தொடர்பு இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வாசாஆ 28

பலிபீடம் சீரமைக்க வேண்டி கொடுத்த கடிதம் என்றால் சரிதான். வாசாஆ 29 ஆவணம் 1971 டிசம்பர் முதல் 1972 டிசம்பர் ற்கான வரவு செலவிற்கான ஓராண்டு திரட்டு கணக்கு அறிக்கை என்றால் சரிதான். வாசாஆ 29 ன் படி 1971 , 1972 லேயே பொருளாளர் செயலாளர் தலைவர் என்று குறிப்பிட்டு தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாசாஆ 30 ஆவணம் 1976 டிசம்பர் முதல் 1977 டிசம்பர் ற்கான வரவு செலவிற்கான ஓராண்டு திரட்டு கணக்கு அறிக்கை என்றால் சரிதான். வாசாஆ 30 ன் படி 1976 , 1977 லேயே பொருளாளர் செயலாளர் தலைவர் என்று குறிப்பிட்டு தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாசாஆ 31 ஆவணம் 1977 டிசம்பர் முதல் 1978 டிசம்பர் ற்கான வரவு செலவிற்கான ஓராண்டு திரட்டு கணக்கு அறிக்கை என்றால் சரிதான். வாசாஆ 31 ன் படி 1977, 1978 லேயே பொருளாளர் செயலாளர் தலைவர் என்று குறிப்பிட்டு தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். . வாசாஆ 32 ஆவணம் 1978 டிசம்பர் முதல் 1979 டிசம்பர் ற்கான வரவு செலவிற்கான ஓராண்டு திரட்டு கணக்கு அறிக்கை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 32 ன் படி 1978 , 1979 லேயே பொருளாளர் செயலாளர் தலைவர் என்று குறிப்பிட்டு தான் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வாசாஆ 33 34, 35, 36 , 37, 38, 39 மற்றும் 40 அனைத்து ஆவணங்களும் அந்தந்த வருடத்திற்கான வரவு செலவிற்கான ஓராண்டு திரட்டு கணக்கு அறிக்கை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 33 ன் படி அதில் குறிப்பிட்ட வருடங்களிலேயே பொருளாளர் செயலாளர் தலைவர் என்று குறிப்பிட்டு தான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பொதுவாக குறிப்பிடுவது உண்டு. அது பங்கு தந்தை தான் , தலைவரின் பணியை ஆற்றுபவர். வாசாஆ 33 ல் 7 சதவீதம் வரி செலுத்தியது குறித்த ஆவணம் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து என வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மேற்படி வழக்கு பட்டிகை சொத்திற்கான சர்வே எண் எந்த கிராமத்திலுள்ளது மற்றும் எந்த தாலுகாவில் உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாசாஆ 41 முதல் 47 வரை உள்ள ஆவணங்கள் குறித்து நான் சாட்சி அளிக்க முடியாது என்றால் சரியல்ல. வாசாஆ 48 முதல் 50 வரை உள்ள ஆவணங்கள் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 1 முதல் வாசாஆ 50 வரை ஆவணங்கள் குறித்து நேரடியாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் கோப்புகளின் அடிப்படையில் தெரியும். வாசாஆ 1 முதல் வாசாஆ 50 வரை ஆவணங்கள் குறித்து நேரடியாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது மற்றும் கோப்புகுளின் அடிப்படையில் தான் தெரியும் என்பதாலும் இவ்வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க எவ்வித உரிமையும் இ,ல்லை என்றால் சரியல்ல.

நீண்ட கால பழக்க வழக்கங்களின் அடிப்படையில் திருக்குடும்ப ஆலயம் ஊர் நிர்வாகம் தான் முறையாக நிர்வாகம் செய்து வருவதால் மேற்படி நீண்ட கால பழக்க வழக்கங்களை மாற்றம் செய்வதற்கோ வேறு நிர்வாக முறை அமைப்பதற்கோ வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 26 ன் படி ஆலய சொத்துக்களை நிர்வாகம் செய்வதற்கும் சட்ட விதிமுறைகள் இயற்றவும் முழு உரிமை உண்டு மேற்படி உரிமையை திருச்சபையின் விதிமுறைகள் என்ற கெனான் சட்டத்தின்படி நாங்கள் தடுக்க இயலாது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித மூல காரணமும் இல்லை. பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**